திற்கு ஒருக்கால் இந்த 115-ல் 50 அல்லது 60 கூட ஒரு மாவட்டத் திற்குச் செல்லக் கூடிய ஒரு நிலை இருந்தால் அப்படிக் கொடுப்பதற்கு அரசு பின்வாங்காது.

நீதிமன்றங்களுக்கு கட்டடங்கள்

* 196 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மாயூரத்தில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு சொந்த கட்டடம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கு கட்டடம் கட்டுவதற் காக வரைப்படங்களும் மதிப்பீடும் அரசுக்கு அனுப்புவதாக உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. அவை வந்தபின் இது விஷயம் பரிசீலிக்கப் படும்.

* 197 வினு—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலத்திற்கான முன்சீப் கோர்ட்டுக்கு புதிய கட்டடம் எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதுபற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : தற்போது இருக்கிற இந்த முன்சீப் கோர்ட் அரசாங்க மருத்துவ மனைக்குப் பக்கத்தில் இருப்பதால் அரசாங்க மருத்துவ மனை விஸ்தரிக்கப்பட முடியாமல் உள்ளது. முன்சீப் கோர்ட்டுக்கு ஒரு புதுக் கட்டடம் கட்ட வேண்டும் என்ற கோரிக்கைக்கு மதுரைக்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் வந்திருந்தபோது திருமங்கலத்துக்கு அவர்கள் நேரடியாக வந் திருந்து எந்த இடத்தில் கட்டவேண்டுமென்று அந்த இடத்தையும் அவர்கள் பார்வையிட்டார்கள். திருமங்கலத்தில் அமைச்சரிடம் நான் நேரில் இந்த ஒரு கோரிக்கையை வலியுறுத்தியபோது, விரை வில் ஆவன செய்வதாக அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருக் கிறார்கள். இப்போது கட்டவில்லையே என்றாலும் இனிமேலாவது அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் தக்க முயற்சி களை முனைந்து எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது முன்சீப் கோர்ட் டுக்கு ஒரு தனி கட்டடம் இருந்து வருகிறது. ஆகவே, முன்சீப் கோர்ட்டுக்கு வேறு ஒரு கட்டடம் கட்டுவது என்ற பிரச்னை இல்லை. இது மருத்துவ மனைக்குப் பக்கத்தில் இருப்பதால் இதை வேறு இடத்திற்கு மாற்றலாமா என்று ஆலோசிக்கப்பட்டது. இரண்டு

1970 செப்டம்பர் 2]

இடங்களை அதற்காக முதலில் தேர்ந்தெடுத்தார்கள். அந்த இரண்டு இடங்களுக்கும் ஆட்சேபனைகள் ஏராளமாக இருந்தன. இறுதியாக அரசாங்கத்திற்கு இருக்கிற இடத்திலேயே கட்டலாம் என்று உயர் நீதிமன்றம் ஒப்புக்கொண்டது. இனிமேல் கட்டடம் கட்டும் முயற்சியில் ஈடுபடும். பணம் வர வர இதுபோன்ற கட்டடங்களுக்கு செலவழிக்க படிப்படியாக திட்டமிடப்படும்.

வெண்கலச் சிலைகள் ஏற்றுமதி

* 198 வினா—திரு. வை. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் தயாராகும் வெண்கல சிலைகளை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தமிழக அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வெண்கலச் சிலைகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறோம். மேலும் ஏற்றுமதியை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

திரு. வை. சுவாமிநாதன் : அம்மாதிரி எந்தெந்த நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்த நாடுகளுக்கு எவ்வளவு எவ்வளவு ஏற்றுமதி ஆகிறது என்ற விவரம் இல்லை. ஒவ்வொரு நாட்டிலும் இவைகளை ஆங்காங்கு நடக்கிற கண்காட்சிகளில் வைக்கிறோம். ஹாங்காங்கில் வைத்திருக்கிறோம், ஸிட்னி ஃபேரில் வைத்திருக்கிறோம், ரோமில் வைத்திருக்கிறோம், வாஷிங்டனில் வைத்திருக்கிறோம், ஜி. டி. ஆர்-ல் வைத்திருக்கிறோம், ஃப்ராங்ஃபர்ட்டில் வைத்திருக்கிறோம். இப்போது நம் சிறு தொழில்கள் வாரியம் இதுபோன்ற ஏராளமான சிலைகளை சப்ளை செய்யவேண்டும் என்று ஒரு உத்தரவு வந்திருக்கிறது நம் எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கார்ப்பரேஷனிலிருந்து. எந்தெந்த நாடுகளுக்கு எவ்வளவு எவ்வளவு என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister what kind of statues are finding market in the outside world ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நிறைய இருக்கின்றன. ஆக்ஸிடைஸ்ட் நடராஜா, ப்ரான்ஸ் நடராஜா, பார்வதி சிலை, மீனாட்சி சிலை, வினாயகர் சிலை, டான்ஸிங் ஃபிகேர்ஸ். வினாயகர் சிலைக்குத்தான் மிகவும் குறைந்த விலை போட்டிருக்கிறது, 75 ரூபாய்தான் போட்டிருக்கிறது. சிவகாமி சிலை, கண்ணுடியம்மன் சிலை, விளக்குநாச்சியார் சிலை, நின்று கொண்டிருக்கும் வினாயகர், ஸ்டான்டிங் வினாயகர், சிவன் சிலை, அர்த்தநாரீஸ்வரர் சிலை, அபீயாசம்மன் சிலை, நெம்மியம்மன் சிலை, நாகையம்மன் சிலை போன்றவற்றை கேட்கிறார்கள். புதிதாக ஒரு கொள்கையை எடுத்து வெளிநாடுகளில் நடைபெறுகிற அத்தனை கண்காட்சிகளிலும் நம் சிறு தொழில்கள் வாரியம் சார்பில் பங்கேற்று இந்தச் சிலைகளை வைக்கிறோம். இவற்றிற்கு மிகுந்த